தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை 1981 ஆகஸ்ட், 22.

ஆவணி 6, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணி அளவில் மாண்பு மிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''குடிசெய்வார்க்கு இல்லை பருவம் ; மடிசெய்து
மானம் கருதக் கெடும்''

தம் குடும்பத்தை, சமுதாயத்தை, நாட்டை உயர்த்துவதற் காகவும், முன்னேற்றம் அடையுமாறு செய்வதற்காகவும் பணி புரிய விரும்புவோர்க்கு அந்தப் பணிகளையும் தொண்டுகளை யும் செய்வதற்கு உரிய, ஏற்ற காலம் என ஒன்று இல்லை. இதற்கு ஏற்ற காலம் வரட்டும் என எண்ணிக் காத்துக் கொண்டு இருக்கத் தேவையில்லை. அவர்கள் உடனடியாகச் செயல்படு வதே வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லது.

1. வினாக்கள் விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பம்புசெட்டுகளுக்கான சீரான மின் விநியோகம்.

*வினா எண். 1—திரு. சி. கோபால் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பம்பு செட்டுகளுக்கு சில இடங்களில் மின்சார ஓட்டம் ஒரே சீராக வருவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம். மின் தேவைக்கேற்ற உற்பத்தி இல்லாமையாலும், கிரிட் சப்ளை நன்றாக இயங்கும் வகையிலும் சில துணை மின் நிலையங்களின் பகுதிகளில் துண்டிப்பு ஏற்பட்டு மின் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 ஆகஸ்ட் 22

(ஆ) விவசாய பம்பு செட்டுகளுக்கு துண்டிப்பு ஏற்படாமல் ஒரே சீரான மின் விநியோகம் ஏற்படுத்த அரசு 9—3—1981 முதல் சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்துள்ளது. குறித்த காலங்களில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் விநியோகத்தில் எவ்வித தடங்கலும் ஏற்படாது பார்த்துக் கொள்ளுமாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. சி. கோபல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பல இடங்களில் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் காலையில் 6 மணி நேரமும், மாலையிலே 6 மணி நேரமும் கொடுக்கப்பட்டு வருகிறது. வறட்சி ஏற்பட்டிருக்கின்ற சில பகுதிகளில் மின்சாரம் சீராக அந்த 6 மணி நேரமும் கிடைப்பதில்லை என்ற சூழ்நிலை இருக்கின்றது. நாள் முழுவதும் ஒரே சீராக மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே 12—7—1981 முதல் விவசாயத்திற்கு 2 தவணைகளில் மின்சாரம் தரப்படுகிறது. ஒரு நாளைக்கு 14 மணி நேரம் மின்சாரம் தரப்படுகிறது. பகலிலே 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் ஒரு பகுதியினருக்கு மின்சாரம் கிடைத்து வருகிறது. இது இப்போதுள்ள ஏற்பாடு அல்ல. சாதாரணமாக மின்வாரியம் எப்போதும் மேற்கொள்கிற ஏற்பாடாகும்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் தற்சமயம் இன்டஸ்டிரிக்காக கொடுப்பது போல—தொழிற்சாலைகளுக்கு விதிவிலக்குக் கொடுத்து 24 மணி நேரமும் மின்சாரம் கொடுப்பதுபோல—வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருநாள் முழுவதும் சீராக மின்சாரம் வழங்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு 24 மணி நேரமும் எல்லோருக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்றால் மின் உச்சத் தேவை அதிகரிக்கும். அதைச் சரிகட்ட மின்வாரியத்தால் இயலாது. தொழிற்சாலைகளுக்கு அப்படி அல்ல.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் மின்சாரம் சீராக வருவது இல்லை என்பது மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களை விட வடார்க்காடு மாவட்டத்தில் மின்சாரம் வோல்டேஜ் டிராப் அதிகமாக இருக்கிறது என்று தெரிய வருகிறது. அதை நிவர்த்தி செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

1981 ஆகஸ்ட் 22]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, பருவமழை தவறிய காரணத்தால் விவசாயக் கிணறுகளில் போதிய அளவுக்கு தண்ணீர் இல்லாத காரணத்தினால், பம்ப் செட்டுகளை முழுமையாகப் பயன்படுத்த இயலவில்லை. இந்த மாதிரி சூழ்நிலையில் மினிமம் சார்ஜ் என்று வசூலிக்கப்படுகின்ற மின்சாரக் கட்டணத்தை—கர்நாடக மாநிலத்தில் செய்ததைப் போல அந்த மின்சாரக் கட்டணத்தை, மினிமம் சார்ஜ் கட்டணத்தை ரத்து செய்துவிட்டு, எந்த அளவுக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறார்களோ அந்த அளவுக்கு மட்டும் கட்டணத்தை வசூலிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விவசாயத்தைப் பொறுத்தவரை ஆண்டு குறைந்த கட்டணம் எதுவும் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, விவசாய பம்புசெட்டுகளுக்கு சீரான மின்சார விநியோகத்திற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள், நன்றி. ஆனால் பில் தொகை உரிய காலத்தில் தெரிவிக்கப்படாத காரணத்தால் 1 பிளஸ் 1 என்ற வீதத்தில் கட்டணம் கட்டாத இடங்களில் மின் துண்டிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு நீக்குப்போக்கான ஏற்பாடு செய்து, மின்சாரம் வழங்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள் அனுபவம் உள்ள உறுப்பினர், தனிக் கேள்வி போடவும்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது விவசாயத்திற்கு நாள் முழுவதும் மின்சாரம் சீராக வழங்கக்கூடிய அளவுக்கு மின்சாரம் இல்லை என்று சொன்னார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட பல இடங்களில் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் பம்பு செட்டுகளை கழற்றி வீடுகளிலே கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். ஆகவே, தண்ணீர் உள்ள இடங்களிலாவது 8 முதல் 10 மணி நேரத்திற்குத் தொடர்ந்து மின்சாரம் சீராக விநியோகம் செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்போது பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் தொடர்ந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் அதற்கு மேல் இறைக்க தண்ணீர் இருக்கும் என்று நம்ப முடியவில்லை. அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் சீராக மின்சாரம் வழங்க உத்தரவாதம் அளிக்கப்படும்.

[1981 ஆகஸ்ட் 22

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, சில இடங்களில் மின்சாரம் சரியாக வராத காரணத்தால் மோட்டார் காயில் எரிந்து விடுகிறது. ஆகவே, அப்படி பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு எரிந்துவிடுகிற மோட்டார்களைப் புதுப்பிக்க அரசு கடன் அல்லது மானியம் அளித்து உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவாகளே, மின்சாரம் தடைப்பட்டு மீண்டும் வருகிறபோது அத்தகைய நிலைமை ஏற்படுகிறது. அந்த பம்புசெட்டை இயக்குகிறவர்கள் அந்த மோட்டாரை நிறுத்தி மீண்டும் தொடங்கினால் மோட்டார் காயில் எரியும் நிலைமை வராது. அப்படிப்பட்ட மோட்டாரை புதுப்பிக்க கடனோ, மானியமோ வழங்குகிற அளவுக்கு மின்சார வாரியத்தின் நிதி நிலைமை இடம் தரவில்லை.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு மின்சாரம் சீராக கிடைக்காத காரணத்தால் பம்பு செட்டுகள் பழுதடைகின்றன. இந்தக் குறையை நீக்கு வதற்கு அரசு பொது இடங்களில் ஆழ் கிணறுகளைத் தோண்டி, 100 ஏக்கர், 200 ஏக்கர் என்ற அடிப்படையில், மின்சாரம் மூலம் நீர் இறைக்கும் முறையை ஏற்படுத்த அரசு முன் வருமா ? அப்படிச் செய்தால் இந்தச் சிக்கல் விவசாயிகளிடமிருந்து நீங்கும். ஆகவே, அரசு அதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதன் பிறகு தண்ணீருக்கு உரிய கட்டணத்தைச் செலுத்த மாட்டார்கள்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, விவசாயி களுக்குப் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் கொடுப்பதாகச் சொன்னார்கள், நன்றி. ஆனால் விவசாயிகள் இரவில் பாம்பு போன்ற விஷ ஜந்துக்கள் மத்தியில் சென்று நீர் இறைக்க முடியாமல் இருப்பதால் இந்த 14 மணி நேரமும் பகலிலே மின்சாரம் வழங்கி, விவசாயிகளுக்கு உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பகலில் மொத்தம் 12 மணி நேரம்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 14 மணி நேரம் பகலுக்கு கேட்கிறார்கள் (சிரிப்பு). அது எப்படி சாத்தியம் என்று தெரியவில்லை. இருந் தாலும் பகல் நேரத்தில் உச்ச தேவை அதிகமாக இருக்கிற காரணத்தால் அதைச் செய்ய இயலாது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY